# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

Sessions Case No.43/2023

Deposition of witness – PW2

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | பொன்மனச்செல்வன் | Caste | : |
| S/o. | : | செந்தில்குமார் | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

Solemnly affirmed on 01.11.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

கேள்வி– உனக்கு என்ன வயதாகிறது?

பதில் – எனக்கு 17 வயதாகிறது.

கேள்வி– நீ என்ன படித்து வருகிறாய்?

பதில் – நான் 12ம் வகுப்பு படித்து வருகிறேன்.

கேள்வி – நீங்கள் வந்திருக்கும் இடம் என்ன இடம் என்று தெரியுமா?

பதில்– இது நீதிமன்றம்

கேள்வி– நீதிமன்றத்திற்கு எதற்காக வந்துள்ளேன்?

பதில் – நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

கேள்வி – நீதிமன்றத்திற்கு வந்தால் என்ன சொல்ல வேண்டும்?

பதில் – நடந்த உண்மையை சொல்ல வேண்டும்.

கேள்வி. – நீதிமன்றத்தில் எவ்வாறு சாட்சியம் அளிக்க வேண்டும்?

பதில் – நீதிமன்றத்தில் நேர்மையாக பதில் அளிக்க வேண்டும்.

மேற்படி கேள்விகள் அனைத்திற்கும் சாட்சியானவர் தயக்கமின்றி பதில் அளித்ததால் சாட்சி சாட்சியம் அளிக்க தகுதியானவர் என்று கருதி மேற்கொண்டு விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டு முதல் விசாரணை செய்ய உத்தரவிடப்படுகிறது.

முதல் விசாரணை;

அ.சா.1 செந்தில்குமார் என்னுடைய அப்பா. நான் மல்லியகரையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி உள்ளூர்க்காரர் என்பதால் அவரை எனக்கு அடையாளம் தெரியும். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. சம்பவ சமயத்தில் நான் தேர் திருவிழாவில் இருந்தேன். என்னுடைய அப்பா 1வது சாட்சி செந்தில்குமார் மயக்கமாக உள்ளார் என்று கேள்விப்பட்டு வீட்டிற்கு சென்று பார்த்தேன். என்னுடைய வீட்டிற்கு முன்னர் என் அப்பா உட்கார்ந்திருந்ததாகவும் திருவிழாவிற்கு வந்தவர்கள் அடித்துக்கொண்டார்கள் என்றும் அவர்கள் என் அப்பா மீது விழுந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத

அனுமதி கோரி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அந்த விசாரணையில் 6 மாதத்திற்கு முன்னர் மல்லியகரை சந்தைபேட்டை சார்ந்த அசோகன் மகன் செல்வகுமார் குடிபோதையில் எங்கள் வீட்டிற்கு முன்பு நின்று ஆபாசமாக பேசிக்கொண்டிருந்தார் என்றும், அதற்கு என் அப்பா, வீட்டிற்கு போடா என்று சொன்னார் என்றும், எதிரி கெட்டவார்த்தையால் என் அப்பாவை திட்டினார் என்றும் அதனால் என் அப்பாவிற்கும் எதிரிக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றும், கடந்த 17.8.2022ம் தேதி இரவு 10.00 மணிக்கு ஆஜர் எதிரி ஆபாசமாக என் அப்பாவை திட்டி இன்னைக்கு வாடா பார்க்கலாம் என்று கூறினார் என்றும், அதற்கு என் அப்பா, வேனும்னே வம்பு சண்டைக்கு வர நீ வீட்டுக்கு போடா என்று சொன்னார் என்றும், ஆஜர் எதிரி போடா நொண்டி பயலே என்று என் அப்பாவை திட்டி கன்னத்தில் ஓங்கி அடித்து கீழே தள்ளி காலால் நெற்றியிலும் முதுகிலும் உதைத்தான் என்றும் கீழே கிடந்த கட்டையை எடுத்து இடது கண் புருவத்தில் அடித்து ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும், அதே கட்டையால் என் அப்பாவின் பின்தலையில் அடித்து ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும் என்னுடைய அக்கா புவனேஸ்வரி அங்கு வந்தபோது அவரையும் ஆபாசமாக திட்டி தலை மயிரை பிடித்து இழுத்து கையால் கன்னத்தில் அடித்து அவரது நைட்டியை கிழித்துவிட்டார் என்றும் பின்னர் வீட்டுக்குள்ளே போய் டிவி, சேர் ஆகியவற்றை எடுத்து கீழே போட்டு உடைத்து சேதப்படுத்தினார் என்றும், அருகில் இருந்தவர்கள் ஓடி வந்து

ஒழுங்கா போடா என்று திட்டினார்கள் என்றும் எதிரி தான் கையில் வைத்திருந்த கட்டையை காட்டி மிரட்டினார் என்றும் பின்னர் ஆம்புலன்சிசை வரவழைத்து என் அப்பாவை ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன் என்றும் என் அப்பா சிகிச்சையில் இருந்தபோது அவரிடம் வாக்குமூலம் பெற்று போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரி உள்ளூர்க்காரர் என்பதால் என் அப்பா எதிரியுடன் சமாதானம் செய்துகொண்டார் எனவே எதிரியை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/– S.Sumathy,
Principal Sessions Judge, Salem.